[1973 ஆகஸ்ட் 13

இரயில் பாதைகளை மின்சாரப்படுத்தல்.

*111 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள இரயில் பாதைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பது குறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) சென்னை-அரக்கோணம், சென்னை-கும்மிடிப்பூண்டி இரயில் பாதைகளை மின்சாரப்படுத்த மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, இந்த இரயில் பாதைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் அந்தத் திட்டம் எப்பொழுது மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசிடமிருந்து ஏதேனும் தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் தேதி வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. 1973-74-இல் முழுமையாகத் துவங்கப்படும், அநேகமாக 1976-77-இல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக இப்படிப்பட்டவைகளுக்கு மின் இணைப்பு கிடைப்பதில் தாமதமேற்பட்டு பாதிக்கப்படாமல் இருக்க அவர்களுக்குத் தேவைப்பட்ட மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய அளவில் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிச் சொல்லவில்லை, அப்படித் தேவையுமில்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, சென்னையைச் சுற்றி இப்படிப்பட்ட மின்சார இரயில்களைப் போடுவதற்கு நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டதைப்போல, வளர்ந்து

1973 ஆகஸ்ட் 13]

வரும் பெருநகரங்களான கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் இதுபோன்ற மின்சார இரயில்களை விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சென்னையைச் சுற்றிப் போடவில்லை. சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு போட இருக்கிறோம். பாக்கியிடங்களைப் பற்றி விவரங்கள் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, மின்சாரப் பற்றாக்குறை நமக்கு இருப்பதால் இப்படிப்பட்ட மின்சாரத்தைக் கொடுக்காமல் இருக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை. இப்படிக் கொடுப்பதால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாது என்றுதான் கணக்கிடப்பட்டிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்திய இரயில்வே இலாக்கா தமிழகத்தில் இருக்கும் மீட்டர்கேஜ்களை அகற்றிவிட்டு, பிராட்கேஜ் போடுவதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டதே, அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

பல்புகள் உற்பத்தி.

*112 வினு—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தின் கீழ், ஓர் பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) வருடத்துக்குத் தேவைப்படும் பல்புகளின் எண்ணிக்கையும் அதன் ரூபாய் மதிப்பும் கணக்கிடப்பட்டிருக்கிறதா?